# யூன்– 14 - வியாழன்

## புனித யோன் மெத்தாடியுஸ்

**அங்கேயே பலிப்பீடத்தின் முன் உங்கள் காணிக்கைகளை வைத்துவிட்டு போய் முதலில் அவரிடம் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.'' (மத்.5:24)**

## முதல் வாசகம் : 1 அரசர் 18 : 41 – 46

அக்காலத்தில் எலியா ஆகாபை நோக்கி, "நீர் போய் உணவும் பானமும் அருந்துவீர். ஏனெனில் பெருமழையின் ஓசை கேட்கிறது" என்றார்.ஆகாபு உணவும் பானமும் அருந்தச் சென்றவுடன், எலியா கர்மேல் மலையின் உச்சிக்கு ஏறிச்சென்று. அங்கே தரையில் மண்டியிட்டுத் தம்முழங்கால்களுக்கு இடையே முகத்தைப் புதைத்துக்கொணடார்.பின்பு அவர் தம்பணியாளனை நோக்கி, "நீபோய்க் கடல் பக்கமாய்ப்பார்" என்றார். அவன் போய்ப்பார்த்து, "ஒன்றும் இல்லை" என்றான். எலியா அவனை நோக்கி, "ஏழுமுறை மீண்டும் சென்றுபார்" என்றார்.ஏழாம் முறை அவன் சென்று பார்த்து "இதோ, மனித உள்ளங்கையளவு சிறிய மேகம் ஒன்று கடலிலிருந்து எழும்பி மேலே வருகிறது" என்றான். அப்போது எலியா அவனை நோக்கி, "நீ போய் ஆகாபிடம், மழை தடுத்து நிறுத்தாதபடி தேரைப் பூட்டிப் போய்விடும்படி சொல்" என்றார். இதற்கிடையில் வானம் இருண்டது. கார் மேகம் சூழ்ந்தது. காற்று அடித்தது. பெரும்மழை பெய்தது. ஆகாபு தேரில் ஏறி இஸ்ரயேலுக்குச் சென்றான்.அந்நேரத்தில் ஆண்டவரின் ஆற்றல் எலியாவின்மேல் வந்திறங்க, அவர் தம் இடையே வரிந்து கட்டிக் கொண்டு, இஸ்ரயேல்வரை ஆகாபுக்கு முன்னே ஓடினார்.

**பதில்பாடல்:** உம்மைப் புகழ்ந்து பாடுவது கடவுளே ஏற்புடையது

## நற்செய்தி : மத்தேயு 5 : 20 – 26

அக்காலத்தில் இயேசு தம்சீடரை நோக்கிக் கூறியதாவது: மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையெனில், நீங்கள் விண்ணரசுக்குள் புகமுடியாது என உங்களுக்குச் சொல்கிறேன்."கொலை செய்யாதே. கொலைசெய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்" என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் "தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார் தம் சகோதரரையோ சகோதரியையோ "முட்டாளே" என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார் "அறிவிலியே" என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார்.“ ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள்மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப்போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள். உங்கள் எதிரி உங்களை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லும்போது வழியிலேயே அவருடன் விரைவாக உடன்பாடு செய்துகொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் எதிரி நடுவரிடம் உங்களை ஒப்படைப்பார். நடுவர் காவலரிடம் ஒப்படைக்க, நீங்கள் சிறையில் அடைக்கப்படுவீர்கள். கடைசிக் காசு வரை திருப்பிச்செலுத்தாமல் அங்கிருந்து வெளியேற மாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன்“ என்றார்.

**தியானம்:** கடவுள் தம் மக்களோடு ஒப்புரவாக வேண்டும் என்று விரும்பியதை உணர்ந்த இறைவாக்கினரான எலியா அதை முன்னதாகவே அறிவிக்கின்றார். கடவுள் எம்மீது இரக்கமும், உருக்கமும் உடையவராயிருக்கிறார். நம்மோடு ஒப்புரவாக தமது விருப்பத்தை நம் வாழ்வின் அன்றாட நிகழ்வுகளின் வழியாக வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார். ஆனால் நாம் அதை உணர்ந்து கொள்ளாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நற்செய்தியில் இயேசு கடவுளோடும், அயலவரோடும் நாம் கொண்டிருக்க வேண்டிய அன்புறவைப்பற்றி தெளிவாகக் கூறுகிறார். சுராசரி மனிதன் எவ்வாறு தன்னை முழுமனிதனாக மாற்றவும், நிறைவுள்ளவனாக்கவும் வழியை கோடிட்டு காட்டுகிறார். எவ்வாறெனில் மக்கள் அனைவருடனும் ஒப்புரவாகி வாழ்வதே கிறிஸ்தவ வாழ்வாகும். நாம் அடுத்தவருடன் ஒப்புரவாகாமல் செய்யும் வழிபாடுகளில் எந்தவித அர்த்தமும் இருக்காது. சமாதானமற்ற உள்ளம் எந்தவித பலியையும் செலுத்தமுடியாது. உறவுகள் முறிந்தநிலையில் ஒருவன் சமாதானமாய் இருக்கமுடியாது. கோபமும் பழிவாங்கும் எண்ணமுள்ள இதயத்தில் அன்பிற்கு இடமில்லை. உறவுகளை சரிப்படுத்தி அன்பினில்வளர, சமாதானத்தை நிலைநாட்ட முனைவோம்.